2013 மே 13]

தொடர்ந்து அந்தச் சங்கம் அந்தப் பகுதி மக்களுக்கு சேவையாற்ற முடியும் என்ற நிலையில் இதுபோன்ற விதிகளுக்குட்பட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்தப் பகுதியில் மேற்கண்ட விதிகள் பூர்த்தியாகும்பட்சத்தில் பக்கத்திலிருக்கிற சங்கங்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லாதவகையில் இருக்குமேயானால், புதிய சங்கம் தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். இல்லாவிட்டால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, இதே காளம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்தினுடைய கிளையை அந்தப் பகுதியில் தொடங்குவதற்கு அதற்கான ஒரு கட்டட வசதியை உருவாக்கிக் கொடுப்பதற்கு அந்தப் பகுதி மக்கள் முன்வருவார்களேயானால் அதைச் செய்வதற்கு துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 469, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

469—

சார் கருவூலக் கட்டடம்

***5326—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில், சார் கருவூல அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

அவர்களுடைய பொற்பாதம் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களது அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவிலில் சார்நிலைக் கருவூல அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான ஆணையினைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் 4.30 மணியளவில் காட்டுமன்னார்கோவிலில் என்னுடைய இல்லத்தில் இருந்து புறப்பட்டு சென்னைக்கு வரும்வரை கார்முகில் கருணை கொண்டு மனமுவந்து மழை பொழிந்து பயிர்களும், உயிர்களும் மகிழ்ச்சியோடு, முகமலர்ச்சியோடு இருப்பதோடு மட்டுமல்லாமல் கோடையிலும் மக்கள் குளிர்ச்சியாக இருக்கின்றார்கள். அதுபோல, நிதிநிலை அறிக்கையைத் தந்த நாள் முதல் இன்று வரை முத்து முத்தாக, கொத்துக் கொத்தாக துறைகள்தோறும் அறிவிப்புகளைத் தந்தது மட்டுமல்ல, (மேசையைத் தட்டும் ஒலி) விதி 110-ன்கீழ் பத்து பத்தாக தங்க கிரீடத்திற்கு வைரக் கல் பதிப்பதுபோல, துறைகள்தோறும் திட்டங்களைத் தந்து கருணை மழையாய் நாட்டு மக்களை குளிர்விக்கச் செய்கின்ற மாட்சிமை பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித மலர்ப் பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன். கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் நகரில் சார் நிலைக் கருவூல அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர ஆவன செய்யப்படும் என்கின்ற குளிர்ச்சியான, மகிழ்ச்சியான உத்தரவினைப் பிறப்பித்திருக்கின்ற வாழும் மனித தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினுடைய ஆற்றல் மிக்க நிதி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினைப் பணிவன்போடு தெரிவித்துக்கொண்டு,

2013 மே 13]

இந்த ஆண்டே அதற்கான பணிகள் தொடங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், உடையார்குடி கிராமம், புல எண் 94/5-ல் 0.04.0 ஹெக்டேர் நிலப்பரப்பில் காட்டுமன்னார்கோவில் சார்நிலைக் கருவூலத்திற்கு கட்டடம் கட்டத் தேவையான நில ஒதுக்கீடு செய்து, நில மாற்ற முன் நுழைவு அனுமதி வழங்கி, கடலூர் மாவட்ட ஆட்சியரால் 25-4-2013 அன்று ஆணை வழங்கப்பட்டுள்ளது. காட்டுமன்னார்கோவிலில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் கருவூலத்திற்கான சொந்தக் கட்டடம் பொதுப் பணித் துறையின்மூலம் விரைவில் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அட்சய திருதியை என்றும், தங்கம் வாங்கினால் இல்லங்கள்தோறும் தங்கம் தங்கும் என்றும் சொல்வார்கள்.*

ஏழைக் குடும்பத்திலே பிறந்திருக்கின்ற நம்மைப் போன்றவர்களுக்கும், என்னைப் போன்றவர்களுக்கும் தங்கத்தின் தங்கமாக, தங்கத் தாரகையாக விளங்குகின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முகத்தைப் பார்த்தாலே (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய இல்லங்களிலே எல்லா வளமும், நலமும், நமக்கு மட்டுமல்ல, நாட்டிற்கும் வந்து சேரும் என்பதைப் பணிவோடு தெரிவித்து, நல்ல அறிவிப்பினை அளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் காட்டுமன்னார்கோவில் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் பணிவான நன்றியினைப் பணிவன்போடு தெரிவித்து அமர்கின்றேன்.